BRAMPTON Flower City
brampton.ca

Service and Information Update

# வரவிருக்கும் பள்ளிகள் செயல்படாத நாட்களில், முழு நாளும் திறந்திருக்கும் வகையில், மாணவர்கள் தங்கவைக்கப்படும் கூடங்களை ப்ராம்ப்ட்டன் மாநகரம் ஏற்பாடு செய்கிறது.

ப்ராம்ப்ட்டன் , ON (ஜனவரி 28, 2020) – எதிர்வரும் ஜனவரி 31, பிப்ரவரி 4 மற்றும் பிரபவரி 6 ஆகிய தேதிகளில் பாலர் வகுப்பு முதல் கிரேடு 8 வகுப்புகள் வரையிலான மாணவர்கள் படிக்கின்ற பீல் ஆரம்பப் பள்ளிகள் மூடப்படும் என்று பீல் மாவட்ட பள்ளிக்கல்வி வாரியம் அறிவித்திருக்கிறது; இதன் காரணமாக இந்தக் குறிப்பிட்ட நாட்களில் ப்ராம்ப்ட்டன் மாநகரம் முழுமையிலும் இருக்கின்ற தேர்ந்தெடுக்கப்பட்ட சமுதாயக் கூடங்களில், கட்டுபடியாகும் செலவில் வசதியான தங்குமிடத்தில் முழு நாளையும் மாணவர்கள் கழிக்கும் விதமாக ப்ராம்ப்ட்டன் நகர நிர்வாகம் ஏற்பாடு செய்துள்ளது.

பள்ளி செல்லும் குழந்தைகளைக் கொண்ட கடுமையாக உழைக்கின்ற பெற்றோர் மற்றும் குடும்பத்தினருக்கு உதவுவதற்காக இந்த மாநகரம் கடமை கொண்டிருக்கிறது.

பள்ளிகள் மூடப்பட்டிருக்கும் இந்த ஒவ்வொரு நாளிலும் நான்கு முதல் 13 வயதுடைய குழந்தைகள் பின்வரும் அமைவிடங்களில் தங்கவைக்கப்படுவார்கள்:

- ப்ராம்ப்ட்டன் சாக்கர் சென்ட்டர் (Brampton Soccer Centre)
- கேஸ்ஸீ கேம்ப்பெல் ரிக்ரியேஷன் சென்ட்டர் (Cassie Campbell Recreation Centre)
- கோர் மெடோஸ் கம்யூனிட்டி சென்ட்டர் (Gore Meadows Community Centre)
- க்ரீன்ப்ரையர் ரிக்ரியேஷன் சென்ட்டர் (Greenbriar Recreation Centre)

மாற்றங்கள் ஏதும் இருப்பது பற்றி மாநகர நிர்வாகம் கண்காணிக்கும். நிகழ்ச்சி பற்றிய புதிய தகவல்கள் மற்றும் பதிவு செய்யும் விபரங்கள் ஆன்லைனில் கிடைக்குமிடம்: www.brampton.ca/recreation.

முழு நாள் தங்குமிட வசதியானது, பீல் மாவட்ட பள்ளிக்கல்வி வாரியம் (Peel District School Board)/டஃப்பரின் -பீல் கத்தோலிக் மாவட்ட பள்ளிக்கல்வி வாரியப்(Dufferin-Peel Catholic District School Board ) பள்ளிகள் மூடப்பட்டால் மட்டுமே வழங்கப்படும் என்பதை கவனத்தில் கொள்ளவும்.

BRAMPTON Flower City
brampton.ca

Service and Information Update

**ஊடக தொடர்பு**

மோனிக்கா துக்கல்
ஒருங்கிணைப்பாளர், ஊடகம் & சமுதாய ஈடுபாடு
யுக்திரீதியான தகவல் தொடர்பு
ப்ராம்ப்ட்டன் நகரம்
905-874-3426 | Monika.Duggal@brampton.ca